04.01.2025 OS.No. 155/2018

சாட்சி : PW 2 காசிவிஸ்வநாதன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை :**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். எனக்கு என்ன வயதாகிறது என்றால் 84 வயது ஆகிறது. நான் மூக்கையா சேர்வைக்கு உறவினர் இல்லை என்றால் சரிதான். எனக்கு ஆதார் அட்டை உள்ளதா என்றால் உள்ளது. ஆதார் அட்டை எப்போது எடுத்தது என்றால் 10, 15 வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்டது. எனக்கு நேமத்தான்பட்டி சொந்த ஊர் என்றால் சரிதான். இந்த நேமத்தான்பட்டிக்கும் மூக்கையா சேர்வை ஊரான இலுப்பக்குடிக்கு இடையே சுமார் 35 கி.மீ இருக்குமா என்றால் 25 கி.மீ இருக்கும்.

2. நான் எங்கு வாக்கு செலுத்துவேன் என்றால் காரைக்குடியில் வாக்களிப்பேன். எனக்கு பூர்வீக ஊர் நேமத்தான்பட்டி என்றும் தற்சமயம் குடியிருப்பதும் நேமத்தான்பட்டி என்று எனது நிருபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மூக்கையா சேர்வையை சார்ந்த சமூகத்திலும் எங்கள் ஊரிலும் என்னைவிட வயதில் மூத்த நபர்கள் உள்ளார்களா என்றால் உள்ளனர். 1983 ம் ஆண்டு மூக்கையா சேர்வைக்கு என்ன வயதிருக்கும் என்றால் 70 வயது இருக்கும். மூக்கையா சேர்வைக்கு எத்தனை மகன்கள் மற்றும் மகள்கள் என்றால் 4 மகன்கள் மற்றும் 1 மகள் ஆவார்கள். மூக்கையா சேர்வையின் மகன்களில் ஒருவரான அழகப்பனுக்கு 1983 ல் என்ன வயதிருக்கும் என்றால் 51 வயது இருக்கும். அழகப்பன் எத்தனையாவது மகன் என்றால் 2 வது மகன் ஆவார்.

3. அழகப்பனுக்கு கடைசி வாரிசு யார் என்றால் நீலாவதி ஆவார். மூக்கையா சேர்வையின் கடைசி மகனுக்கு 1983 ல் என்ன வயதிற்கும் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு மூக்கையா சேர்வையின் கடைசி மகனின் பெயரோ, அடையாளமோ தெரியுமா என்றால் இல்லை. மூக்கையா சேர்வையின்3வது மகன் பெயர், விபரம் மற்றும் 1983 ல் அவரது வயது என்ன என்று எனக்குதெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மூக்கையா சேர்வையின் 1வது மகன் பெயர், விபரம் மற்றும் 1983 ல் அவரது வயது என்ன என்று எனக்குதெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

4. மூக்கையா சேர்வை எப்போது இறந்தார் என்றால் 1988ல் இறந்தார். நான் அவருடைய இறப்புச் சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர் 1988ல் இறந்தார் என்று வாதி சொல்லி நான் கூறுகிறேனா என்றால் அவர் மகன் அழகப்பனிடம் சென்று கேதம் கேட்டேன். நான் இதை போல எத்தனை உயில் மற்றும் ஆவணங்களில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் வேறு எந்த ஆவணத்திலும் போடவில்லை. உயில் என்பது மதிப்புமிக்க நம்பகமான ஆவணம் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். உயில் மற்றும் மதிப்பு மிக்க ஆவணங்கள் முத்திரைத்தாள்களில் தான் எழுதப்படும் என்றால் உயிலினை முத்திரைத்தாளிலும் எழுதலாம் வெள்ளைப் பேப்பரிலும் எழுதலாம். உயில் எழுதுவதற்கு ஏதேனும் அவசரதன்மை இருந்ததா என்றால் அவருடைய 2ம் மகன் அழகப்பன் குடித்து கும்மாளமிட்டு மதுபழக்கத்திற்கு ஆளாகி குடும்பத்தை காப்பாற்றவில்லை என்பதால் அவர் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உயிலினை எழுதிக்கொடுத்தார்.

5. அழகப்பன் குடித்து கும்மாளமிட்டதாக நான் சொல்லியுள்ளது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும் அவர் குடித்துவிட்டு ஹோட்டலில் விழுந்து கிடப்பார். அதை நான் நேரடியாக பார்த்துள்ளேன். 1983 ம் ஆண்டுக்குபிறகு அழகப்பன் காரைக்குடியில் இடையர் தெருவில் எத்தனை ஆண்டுகள் ஹோட்டல் வைத்திருந்தார் என்றால் அவர் 7, 8 ஆண்டுகள் நடத்திவந்தார். அவர் சுமார் 18 ஆண்டுகள் ஹோட்டல் நடத்தி வந்தார் என்று நான் சொல்லிகிறேன் என்றால் ஆமாம். 1983 பிறகு நான் எத்தனை வருடம் அவருடைய ஹோட்டலுக்கு சென்றிருப்பேன் என்றால் சுமார் 4 ஆண்டுகள் சென்றிருப்பேன். அழகப்பன் எனக்கு நண்பரா என்றால் ஆமாம்.

6. அழகப்பனிடம் அவரது குடும்பத்தினரின் நலவிரும்பி என்ற முறையில் உயில் குறித்து நான் கூறினேனா என்றால் இல்லை. அழகப்பன் குடிகாரர் என்று தெரிந்தும் அவர் ஹோட்டலில் விழுந்து கிடப்பார் என்று தெரிந்தும் நான் ஏன் அவரது ஹோட்டலில் உணவருந்த செல்வேன் என்றால் ஹோட்டலில் உணவு நன்றாக இருக்கும் என்று அங்கு செல்வேன். மற்ற மகன்கள் இருக்கும் போது ஏன் அழகப்பனுக்கு மட்டும் உயில் எழுதிவைத்துளீர்கள் என்று நான் கேட்டேனா என்றால் நான் கேட்டேன். அதற்கு மூக்கையா சேர்வை அழகப்பன் தான் கஷ்டப்படும் காலத்தில் சினிமா நடிகையான கே.பி.சுந்தரம்பாளிடம் வேலைபார்த்து பணம் அனுப்பினார் அதனால் அவருக்கு எழுதி வைத்ததாக சொன்னார்.

7. சாட்சிகள் லெட்சுமணனுக்கு 1983ல் எத்தனை வயதிற்கும் என்றால் 73 வயதிற்கும். சுந்தராஜ்க்கு 1983ல் எத்தனை வயதிற்கும் என்றால் 70 வயதிருக்கும். எனக்கு 1983ல் எத்தனை வயதிருக்கும் என்றால் 42 வயதிருக்கும். 1983ல் நான் காரைக்குடியில் வசித்தற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் பழைய குடும்ப அட்டை உள்ளது.

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ3 ஆவணம் 40 வருடங்களுக்கு முன்னால் எழுதப்பட்ட ஆவணம் போன்று உள்ளதா என்றால் அது பாண்டு பேப்பர் என்பதால் 40 வருடங்கள் ஆனாலும் இதுபோல் உள்ளது.

8. நான் பாண்டு பேப்பர் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா.சா.ஆ3 பாண்டு பேப்பர் அல்ல என்றும் சாதாரண காங்குயர் பேப்பர் என்றால் சரியல்ல. சாட்சி கையெழுத்து போடுவதற்கு சில கடமைகளும் பொறுப்புகளும் உள்ளது என்றால் சரிதான். 1983 ம் ஆண்டு காலகட்டத்தில் அழகப்பன் பெயரில் பட்டா இருந்தது என்பதை பார்த்தீர்களா என்றால் நான் பார்க்கவில்லை. நான் சொல்வதுபோல் அழகப்பன் குடித்துவிட்டு ஹோட்டலில் விழுந்து கிடப்பார் என்ற விவரத்தை நான் என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் 1983ம் வருடத்தில் காரைக்குடியிலேயே வசிக்கவில்லை என்றும், காரைக்குடியில் வசித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ3 உயிலில் அழகப்பன் குடித்து கும்மாளமிடுவதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மூக்கையா சேர்வை குடும்பத்தில் வெண்ணிலை பாகம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை அது அவர்கள் குடும்ப சொத்து ஆகும். உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் 1983 முதல் மூக்கையா சேர்வை உயிருடன் இருந்த காலமான 1988 வரை உயில் ஏன் பதிவு செய்யப்படவில்லை என்றால் அது மூக்கையா சேர்வையின் விருப்பம் ஆகும், அதற்கு குறிப்பிட்ட காரணங்கள் எதுவும் எனக்கு தெரியாது.

10. வா.சா.ஆ.3 உயில் சாட்சிகள் எனக்கு பழக்கப்பட்டவர்களா என்றால் பழக்கப்பட்டவர்கள்தான். உயில் மூக்கையா சேர்வை எழுதி வைத்த உயில் கிடையாது வாதிகளுக்கு நான் பழக்கப்பட்டவர் என்ற அடிப்படையில் மோசடியாக தயார் செய்யப்பட்ட உயில் என்றால் சரியல்ல, உயிலில் மூக்கையா சேர்வை கையெழுத்து செய்தார். மூக்கையா சேர்வையின் தந்தை பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. உயிலில் கரு. மூக்கையா என்று கையெழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மூக்கையா சேர்வையின் தந்தையின் பெயர் முத்துக்கருப்பன் என்றும், நானும் வாதியும் மோசடியாக உயிலை தயார் செய்ததால் தான் மூக்கையா சேர்வையின் தந்தைபெயரை முத்துக்கருப்பன் என்று தெரியாமல் கரு.மூக்கையா என்று போலியாக தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

11. 2017ம் ஆண்டு வரை சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் நடந்த நடவடிக்கைகளில் கூட வாதிகள் வா.சா.ஆ3 உயில் குறித்து எதுவும் சொல்லவில்லை என்றும், தற்போது வாதிகளுடன் சேர்ந்து வா.சா.ஆ3 உயில் வழக்கிற்காக மோசடியாக தயார்

செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, அந்த வழக்கிற்கும் உயிலுக்கும் தொடர்பில்லை. வா.சா.ஆ3ல் கண்டுள்ளது மூக்கையா சேர்வையின் கையெழுத்து இல்லை என்றும், சாட்சிகள் லெட்சுமணன், சுந்தராஜன் கையெழுத்து மோசடியாக போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதரவாக மோசடியாக உயில் தயார் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**(6, 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.